ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2140/4 - 2019 සැප්තැම්බර් මස 09 වැනි සඳුදා - 2019.09.09

*2140/4 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### திருத்த இலக்கம் 03

### அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1840/34 மற்றும் 2013.12.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இல. 2032/26 மற்றும் 2017.08.16 ஆந் திகதிய மற்றும் இல. 2052/26 மற்றும் 2018.01.04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகள் மூலம் திருத்தப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பை பின்வருமாறு திருத்தியமைப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு பணித்துள்ளது.

1. சேவைப் பிரமாணத்தின் பெயராக அமைந்துள்ள "அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு" என்பதற்குப் பதிலாக பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகின்றது.

"முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பு"

2. இதனகத்துப் பின்னர் குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பில் "அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை" எனக் குறிப்பிடப்பட்டுள்ள சகல பிரயோகங்களும் "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை" என்றும், "அரச முகாமைத்துவ உதவியாளர்" என குறிப்பிடப்பட்டுள்ள சகல பிரயோகங்களும் "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்" என்றும் திருத்தியமைக்கப்படல் வேண்டும் என்பதோடு, அந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் "உத்தியோகத்தர்" என குறிப்பிடப்பட்டுள்ளது "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்" எனவும் கருதப்படுதல் வேண்டும்.

கே. வி. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

*09-783*